# செப்டம்பர் – 27 – வியாழன்

## புனித வின்சன்ட் தே போல்

**அது காலையில் தளிர்த்துப் பூத்துக் குலுங்கும்: மாலையில் வாடிக்காய்ந்து போகும். திபா. 90:6**

**முதல் வாசகம் : சபை உரையாளர் 1 : 2 – 11**

தாவீதின் மகனும் எருசலேமின் அரசருமாகிய சபையுரையாளர் உரைத்தவை. வீண், முற்றிலும் வீண், என்கிறார் சபையுரையாளர் வீண், முற்றிலும் வீண், எல்லாமே வீண். மனிதர் தம் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு உழைக்கின்றனர் ஆனால், அவர்கள் உழைப்பினால் பெறும் பயன் என்ன? ஒரு தலைமுறை மறைகின்றது. மறு தலைமுறை தோன்றுகின்றது. உலகமோ மாறாது என்றும் நிலைத்திருக்கின்றது. ஞாயிறு தோன்றுகின்றது. ஞாயிறு மறைகின்றது. பிறகு தன் இடத்திற்கு விரைந்து சென்று மீண்டும் தோன்றுகின்றது. தெற்கு நோக்கிக் காற்று வீசுகின்றது. பிறகு வடக்கு நோக்கித் திரும்புகின்றது. இப்படிச் சுழன்று சுழன்று வீசித் தன் இடத்திற்குத் திரும்புகின்றது. எல்லா ஆறுகளும் ஓடிக் கடலோடு கலக்கின்றன. எனினும், அவை ஒருபோதும் கடலை நிரப்புவதில்லை மீண்டும் ஓடுவதற்காக உற்பத்தியான இடத்திற்கே திரும்புகின்றன. அனைத்தும் சலிப்பையே தருகின்றன. அதைச் சொற்களால் எடுத்துரைக்க இயலாது. எவ்வளவு பார்த்தாலும் கண்ணின் ஆவல் தீர்வதில்லை. எவ்வளவு கேட்டாலும் காதின் வேட்கை தணிவதில்லை. முன்பு இருந்ததே பின்பும் இருக்கும் முன்பு நிகழ்ந்ததே பிறகும் நிகழும். புதியது என்று உலகில் எதுவுமே இல்லை. ஏதேனும் ஒன்றைப்பற்றி, ”இதோ, இது புதியது” என்று சொல்லக்கூடுமா? இல்லை. அது ஏற்கனவே, நமது காலத்திற்கு முன்பே, பல்லாயிரம் ஆண்டுகளாக இருப்பதாயிற்றே! முற்காலத்தவரைப் பற்றிய நினைவு இப்போது யாருக்கும் இல்லை. அவ்வாறே, வரும் காலத்தவருக்கும் தமக்கு முந்திய காலத்தவரைப்பற்றிய நினைவு இருக்கப்போவதில்லை.

**பதில்பாடல் :** என் தலைவரே தலைமுறை தோறும் நீரே என் புகலிடம்

**நற்செய்தி : லூக்கா 9 : 7 – 9**

அக்காலத்தில் நிகழ்ந்தவற்றையெல்லாம் குறுநில மன்னன் ஏரோது கேள்வியுற்று மனம்குழம்பினான். ஏனெனில் சிலர், ”இறந்த யோவான் உயிருடன் எழுப்பப்பட்டார்” என்றனர். வேறுசிலர், ”எலியா தோன்றியிருக்கிறார்” என்றனர். மற்றும்சிலர், ”முற்காலத்து இறைவாக்கினருள் ஒருவர் உயிர்த்தெழுந்துள்ளார்” என்றனர். ஏரோது, ”யோவானின் தலையை நான் வெட்டச்செய்தேனே! இவர் யாரோ? இவரைப்பற்றி இவ்வாறெல்லாம் கேள்விப்படுகிறேனே!” என்றுசொல்லி இயேசுவைக்காண வாய்ப்புத் தேடிக் கொண்டிருந்தான்.

**தியானம் :** உயிர்வாழ எதை உண்போம் என்றோ? உடலை மூட எதை உடுப்போம் என்றோ கவலைப்படாதீர்கள். உணவை விட உயிரும் உடைய விட உடலும் முக்கியம். ஆனால் மனிதன் தம் வாழ் நாள் முழுவதும் பாடுபட்டு உழைக்கின்றான். ஆனால் அவர்கள் உழைப்பினால் பெறும் பயன் என்ன? இவ்வுலகை விட்டு விடை பெறும் பொழுது எதையும் கொண்டு செல்வதில்லை. மறுமைக்குரிய வாழ்வைக் குறித்து அக்கறை கொள்ளாது இம்மைக்குரிய இம் மண்ணுலகைக் குறித்து மட்டும் அக்கறையுள்ளோராய் வாழ முற்படுகின்றோம். இன்றைய முதல் வாசகத்தில் வாழ்க்கை பயனற்றது அதற்குரியது என்று உலகில் எதுவு மேயில்லை. நாம் எல்லோரும் இவ்வுலகின் வழிப் போக்கர்களே என்பதை அழகாக எடுத்துக் கூறுவதைக் கவனிக்கின்றோம். இன்றைய நற்செய்திவாசகத்தில் இயேசு செய்த புதுமைகளையும் போதனைகளையும் <u>கேள்வியுற்ற</u> ஏரோது இயேசுவைக்காண வாய்ப்புத் தேடுகிறான். காரணம் தன்னைவிட மக்களால் அவர் மதிக்கப்படுவாரோ என்ற பொறாமையாகும். நமது உடல் நோய்கள் பலவற்றிற்கும் மனஅழுத்தமே காரணமாகும் எனமருத்துவம் கூறுகிறது. நம்மில் பலர் நம்முடைய தேவைகள் நிறைவேற்றப பட வேண்டுமென்று இறைவனைத் தேடி ஓடுகின்றோம், இறைவார்த்தையைக் கேட்கின்றோம் ஆனால் வாழ்க்கை மாற்றமடைந்ததா? கடந்த காலத்தை துக்கத்துடன் பாராதே, அவை பாரச்சுமை என்று எண்ணாமல் நம்பிக்கை நிறைந்த உள்ளத்தோடு, நாம் அறியாத எதிர்காலத்தை சந்திக்க முழு விசுவாசத்தோடு எமது பயணத்தை தொடர இறைவனிடம் வரம் வேண்டுவோம்.